★ விலை ரூபா 1-25

ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
ஒளி [illegible] மார்கழி 1 ரபி. அவ் 10 இதழ் 304
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-12-83

# றெட்பாரு, காந்தீயம் மீது லக்ஷ்மன் கண்டனம்!

(கொழும்பு)

''றெட்பாரு, காந்தீயம் போன்ற தொண்டர் இயக்கங்கள் நமது நாட்டின் இரகசியத் தகவல்களைத் திரட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றன'' என்று அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் சமூக சேவை அமைச்சின் நிதிஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்த அவர், இந்த இயக்கங்கள் நாட்டின் பொருளாதார, அரசியல் விடயங்களையும் எம். பி.க்கள் பற்றிய தகவல்களையும் திரட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றன என்று தெரி

(8ம் பக்கம் பார்க்க)

# பூர்வாங்க மாநாடு: தமிழரசு கலந்துகொள்ளாது!

## மகாநாயக்க தேரோக்களை ஜனாதிபதி இன்று சந்திப்பார்

(நமது அரசியல் நிருபர்)

**தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான உத்தேச சர்வகட்சி மாநாட்டின் பூர்வாங்க மாநாட்டில், தமிழரசுக்கட்சி கலந்து கொள்ள மாட்டாது என்று கட்சியின் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

பூர்வாங்க மாநாடு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறுகிறது. இம் மாநாட்டில்தான் உத்தேச சர்வகட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியை அழைப்பதா, இல்லையா என்பதுபற்றி முடிவு செய்யப்படவிருக்கிறது.

நிலைமை இவ்வாறிருக்க, தமிழரசுக் கட்சியின் நிலைமை குறித்து, இக்கட்சியின் பொதுச் செயலாளரும் கோப்பாய் எம். பி.யுமான திரு. மு. ஆலாலசுந்தரத்திடம் கருத்துக்கேட்டபோது

''தமிழர் பிரச்னை தொடர்பான பூர்வாங்க சர்வகட்சி மாநாட்டிற்கான அழைப்பு இதுவரை தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கவில்லை. அழைப்பு கிடைத்தபின் அதுபற்றி ஆலோசித்து முடிவுசெய்யப்படும்'' என்றார்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய அங்கம் தமிழரசுக் கட்சி. தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமான திரு. அ. அமிர்தலிங்கமே தமிழரசுக்கட்சித் தலைவராக இருக்கிறார். தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாகச் செயலாளரான நான் தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளராக இருக்கிறேன். இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு கிடைக்காது என நினைக்கிறேன். அப்படி அழைப்பு கிடைத்தால் அது பற்றி கூட்டணியின் தலைமைப் பீடமே இறுதி முடிவு எடுக்கவேண்டும். கூட்டணி அறிவுறுத்தாவிட்டால் தமிழரசுக் கட்சி

(8ம் பக்கம் பார்க்க)

## ஒன்பது அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக இம்மாதம் 21-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு அமைச்சரவை அலுவலகத்தில் கூட்டப்படவுள்ள உத்தேச சர்வ கட்சி மகாநாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒன்பது அரசியல் கட்சிகளுக்கு ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு), இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகிய 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்குமே இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணி, நவசம சமாஜக் கட்சி ஆகிய மூன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதனைபடுத்து கூட்டப்படவுள்ள சர்வகட்சி மகாநாட்டிற்கு அழைக்கப்படவேண்டிய

(8ம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட கார் கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

வசாவிளானில் நேற்றுமுன் தினமிரவு காரொன்று கடத்தப்பட்டது

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். நவீனசந்தை கடைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தை கடைகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நவீன சந்தையிலுள்ள ஒவ்வொரு கடை உரிமையாளரும் கடைக்கு முன்னால் உள்ள விறுந்தை வாசலுக்கு இரும்புக் கேடர்கள் போட்டு வருகிறார்கள். விறுந்தை பக்கத்து வாசலும், பிரதான வாசலும், மாநகரசபையின் செலவில் இரும்புக் கேடர் போடப்படும்.

ஒரு கடைக்கு இரும்புக் கேடர் போட சுமார் 20,000 ரூபா செலவாகும் என கடை உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இரவில் இந்த இரும்பு கேடர்கள் யாவும், அந்தந்த கடை உரிமையாளரினால் பூட்டப்படும். காலையில் இரும்பு கேடர்கள் திறந்து விடப்படும். விறுந்தை வழக்கம்போல் பகலில் நடைபாதையாக பாவிக்கப்படும். இரவில் விறுந்தைக்குள் எவரும் செல்லமுடியாது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் கடை உரிமையாளர்களுடன் ஆலோசித்து இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். (க

## நெல்லியடி வங்கி கொள்ளை முயற்சி: ஜீப், லொறி ரூ 1,50,000 பிணையில் அனுமதி

(புலோலி, கரவெட்டி நிருபர்கள்)

நெல்லியடி மக்கள் வங்கிக் கிளை கொள்ளை முயற்சிக்குப் பயன்படுத்தப்பட்ட லொறியும், ஜீப்பும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பிணையில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

பருத்தித்துறை நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை நேற்று இதற்கு அனுமதி வழங்கினார்.

நெல்லியடி கட்டைவேலி ப. நோ. கூ. சங்க லொறியும், இலங்கை மின்சார சபை ஜீப்பும் இக்கொள்ளை முயற்சிக்குப் பயன்படுத்தப்பட்டு பொலிசாரால் கைப்பற்றப்பட்டிருந்தன.

ஜீப்பில் இருந்த அலவாங்கு போன்ற ஆயுதங்களையும் 2000 ரூபா பிணையில் எடுத்துச்செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார். (கு)

## திருமலை பிரபல டாக்டர் சுட்டுக் கொலை!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பிரபலமான டாக்டர் கே. நல்லலிங்கம் கடந்த புதன் இரவு, அவரது இல்லத்தில் ரி. வி. பார்த்துக்கொண்டிருந்தபோது, சுட்டுக்கொல்லப்பட்டார்!

திருகோணமலை நகரிலிருந்து பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள தம்பலகாமத்திலுள்ள இவரது இல்லத்தில், இரவு எட்டுமணிக்கு இக்கோரக் கொலை நடந்துள்ளது.

நான்குபேர் இவரது இல்லத்துக்குள் திடீரென துப்பாக்கிகளுடன் நுழைந்ததாகவும், அப்போது டாக்டர் ரி. வி. பார்த்துக் கொண்டிருந்ததாகவும், உள்ள காசுகளெல்லாவற்றையும் கொண்டுவரும்படி கூறியதாகவும், டாக்டரின் மனைவி உள்ளேபோய் பணத்தை எடுத்துக்கொண்டு வருவதற்குள், நால்வரில் ஒருவரது துப்பாக்கி டாக்டரைப் பதம்பார்த்து விட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கதிரையில் இருந்து ரி. வி. பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் கதிரையிலேயே பிணமான கோரச் சம்பவம் சில நிமிட நேரத்துக்குள்ளேயே நடந்து முடிந்துவிட்டது.

கொலைஞர்கள் டாக்டரின்

(8ம் பக்கம் பார்க்க)

## '20 ஓவர்' கிரிக்கெட்: சிம்பாவ்வே 90—6

(கொழும்பு)

அகில இலங்கை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், சிம்பாவ்வே கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நேற்று நடைபெற்ற சர்வதேச மட்டுப்படுத்தப்பட்ட '20 ஓவர்' கிரிக்கெட் போட்டியில், சிம்பாவ்வே கோஷ்டி துடுப்பெடுத்தாடியதும், மழைகாரணமாக ஆட்டம் கைவிடப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவ்வே கோஷ்டி மொத்தம் '20 ஓவர்'களில் 6 விக்கெட் நஷ்டத்துக்கு 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

[8-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்நாட்டில் 18,000பேர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டில் தி. மு. க. தலைமையில் 14 எதிர்க்கட்சிகள் நேற்று எம். ஜி. ஆர். அரசுக்கு எதிராக நடத்திய விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் அமைதியாக, அசம்பாவிதங்களின்றி நடைபெற்றதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று தமிழ்நாட்டில் 18,3 1 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. அன்பழகன், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. நாராயணசாமிநாயுடு தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் ஜனப். ரகுமான் ஆகியோரும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பாக முன்கூட்டியே கைதுசெய்யப்பட்டவர்களும், நேற்று கைதுசெய்யப்பட்டவர்களும் குற்றச்சாட்டுகளின்றிவிடப்பட்டு உடனடியாக விடுதலைசெய்யப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.

[8-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நெல்லியடி, சந்தைக்கு அருகாமையில் கரவெட்டி மேற்கில், வெற்றியா வளவு என்னும் மூன்று பரப்புக் காணியும் மூன்று அறையுடன் கூடிய வீடு, கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- செல்வராசா, சித்தாப் பத்தனை, வல்வெட்டி. 10542

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சா. செல்வரட்ணம், D/4, கிளிநொச்சி, அல்லது- 133, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். 10547

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் (கல்வியங்காடு சந்தைக்கு சமீபம்) ஒரு பரப்பு காணியில் அமைந்த இரண்டு அறைவீடு விற்பனைக்குண்டு. விலை ரூபா 1, 75, 000. வே. சுப்பையா, சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர். 10558

கல்வியங்காடு, புதுசெம்மணி வீதியில் நாலுபரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10559

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் நக்கா வீதிச் சந்திக்கு அணித்தாக வீட்டுடன் இரண்டு பரப்புக் காணி விற்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும். 35/4 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 10549

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியில் 85/1, கண்டிவீதி அரியாலையில் தென்னைகள், மாமரங்கள், கிணறு, அடங்கிய மூன்றே கால் பரப்பு வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. ஒருபரப்பின் விலை ஒரு லட்சத்துக்கு மேல் தரகர் வேண்டாம். விரும்பியவர்கள் உடன் கீழ்கண்ட முகவரியுடன் உங்கள் விலைக்கோரிக்கையை சமர்ப்பிக்கவும். த. இராசரத்தினம், மதிவனம், தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. 10535

## FOR SALE

Ford Escort 8 sri six thousand series in immculate condition. Contact - Manager, Pedro Exports Limited, 151, Kasturiar Road, Jaffna. Phone: 24297. (10562

Brand New Hoover Fully Automatic Washing Machine for Sale at Duty Free Price: Please Contact Mrs. Somasunderam, 17/3 - Beach Road, Jaffna. 10541

## தேவை

கல்விபண்பு நிறைந்த இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஏழில் செவ்வாய் உள்ள முப்பத்தொரு வயதுப் பெண்ணுக்கு மணமகன் தேவை. பணம் உட்பட சுமாரான சீதனம் கொடுக்கப்படும். விளம்பர இல. 10550 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10550

பெல்ஸ், ரவுசர், சேட்ஸ், சோட்ஸ் வெட்டி திறமாக தைக்கத்தெரிந்த ரெயிலர் உடன் தேவை. ஜெகபதி காம் றெக்ஸ் அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். 10576

புதிதாக தொடங்கப்பட்டுள்ள அச்சகமொன்றுக்கு அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை. விண்ணப்பிக்குக: 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10575

## வாடகைக்கு

கொடிகாமம் சந்தி (கண்டி- யாழ்ப்பாணம் வீதியில்) அமைந்திருக்கும், வியாபாரத்திற்கு தகுந்த தனியார் அறைகள் நான்கு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு; 17- 12- 83 அன்று நேரில் தொடர்பு கொள்ளவும்: சி. பொன்னையா, கொடிகாமம். 10521

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 10509

## வைத்தியம்

மனநோய், அல்சர், மூலம், சர்மரோகங்கள், நரம்புத் தளர்ச்சி எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தர வாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன் 218/5 பலாலி றோட், கந்தர்மடம். 10355

## தவறிவிட்டதா?

13-12-83 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தொடர்பு கொள்ளவும். தலைவர் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், ஆனைக் கோட்டை வீதி, அல்லது இ. செல்வநாதன் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். 10571

## வகுப்பு

G. S. Q. (Bio); G. S. Q. (Physical and Maths) B sc (Bio); B.sc (Physical and Maths) Montessori Diploma Teachers Training Course [பாலர் ஆசிரியர் பயிற்சி வகுப்பு] Home Science Diploma [மனையியல் பயிற்சி வகுப்பு] இக்கல்லூரியில் விஞ்ஞான செய்முறைகள் பட்டதாரிப் படிப்புக்கேற்ற முறையில் விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளது. கல்வித்திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தனியார் கல்லூரி. 7-1-84ல் ஆரம்பமாகின்றன. 30-12-83க்கு முன் பதிவு செய்து கொள்ளவும். விபரத்துக்கு; அதிபர், உயர் கலைக்கல்லூரி, 13, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10572

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

சுன்னாகம், ஏழாலை மேற்கைச் சேர்ந்த சிவசிதம்பரம் சிவசுப்பிரமணியம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்

— காலஞ்சென்றவர்

வழ. இல: ரி/176

சிவசிதம்பரம் சிவசுப்பிரமணியம் கைம்பெண் தெய்வநாயகி, ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

— மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு தைமாதம் 4ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

1983ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

(ஒப்பம்)
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைதல்:

(ஒப்பம்)
அ. உமாசங்கர்
மனுதாரின் சட்டத்தரணி
(10475)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## Vacancies

SAUDI ARABIA

INSULATORS
TIN SMITHS
RIGGERS
CAMP BOSSES
COOKS and HELPERS
COMMON WORKERS

Apply before 20/12/83 with copies of experience certificates and passport.

CONSTRUCTION AND DEVELOPMENT Co. LTD:
37, S. de. S. Jayasinghe Mawatha, Nugegoda.

Labour Licence No. 96.
Foreign Employment Divi.
No: FE/6/FEA//96/4376

10570

## அகதி தாக்குதல் குறித்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி குருகுலம் அகதி முகாமில், அகதி ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பாக திரு. ஆர். எஸ். வீரசிங்க விசாரணை செய்துவருகுறார்.

இச்சம்பவம் பற்றிப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா இதுபற்றி விசாரணை செய்யுமாறு திரு. வீரசிங்காவைப் பணித்திருந்தார்.

குருகுலம் முகாமில் நாகராசா என்பவர் சமூகசேவை ஊழியரால் தாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டிருந்தது.

இவ்விசாரணை இவ்வார இறுதியில் பூர்த்தியாகுமென்றும், விசாரணை முடிவு திங்கட்கிழமை, அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரியவருகிறது. (க)

## யா/இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க வருடாந்த விழா

மேற்படி விழாவை 1984 மாசித்திங்களில் நடாத்த சங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான விடயங்களை ஆலோசிக்க 30-12-83க்கு முன்னர் வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம். (10573)

## BINDER PASTE GUM

(பைன்டர் கம்)

கை வேலைக்கு DRESS MAKIKG மாணவிகளுக்கு பள்ளி மாணவர்களுக்கு மிகவும் உகந்தது.

பைன்டர் கம் வேண்டும்பொழுது 'WHITEFIELD பைன்டர் கம்' என்று கேட்டு வாங்குங்கள்.

பாடசாலைகள், மற்றும் மொத்தமாகப் பெற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். விசேட கழிவு உண்டு.

**WHITEFIELD INDUSTRIES**
VALLAI ROAD, CHANKANAI. (10568)

## அந்தியேட்டி அழைப்பு



**செல்வன் வேல் மகேந்திரன்**

மேற்பார்வையாளர்,
அரசாங்கக் கட்டடத் திணைக்களம், கொழும்பு.
பூநகரி ப. நோ. கூ. சங்க
மட்டுவில் நாட்டுக்கிளைக்குழு உறுப்பினர்

தோற்றம்: 19-12-1953 மறைவு: 25-7-1983

25-7-83இல் வத்தளையில்

அகால மரணமெய்திய இவரின் அந்தியேட்டிக்கிரியைகள்

19-12-83 திங்கட்கிழமை

அதிகாலையில் கீரிமலையிலும்

20-12-83 செவ்வாய்க்கிழமை பூநகரி வாடியடியில் அன்னாரின் பெற்றோர்களின் இல்லத்திலும் நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நண்பர்களையும் உறவினர்களையும் அழைக்கிறோம.

அ வேலாயுதமும் பாரியார் இரத்தினபூபதியும்
வாடியடி, பூநகரி. பெற்றோர். (10530)

## அரிய சந்தர்ப்பம்

## International Telex Operators Training

பயிற்சிகள் கிழமை நாட்களிலும், சனி, ஞாயிறு நாட்களிலும் நடைபெறும்.
ஆங்கில அறிவு, தட்டச்சு இயந்திரத்தில் பயிற்சி உள்ள இரு பாலாரும் சேரலாம்.
கட்டணம் 650/- மட்டும்
யாழ். நகரில் இங்கு மட்டுமே செய்முறைப் பயிற்சியளிக்கப்படுகின்றன.

**ஆரம்பம் 23-12-83**

விபரங்களுக்கு:

**THE SCHOOL OF COMPUTER STUDIES,**
52/1 கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

# லெபனானில் சிரிய இராணுவ நிலைகள் மீது அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல்!

பெய்ரூட், டிச. 15

லெபனானின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள சிரியாவின் இராணுவத் தளங்களை அமெரிக்காவின் கடற்படைப் போர்க் கப்பல்கள் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து தாக்கியுள்ளன.

அமெரிக்காவின் கடற் படையைச் சேர்ந்த மூன்று அதிவேகக் கப்பல்களே இத்தாக்குதல்களை நேற்றும் தொடர்ந்தும் நடத்தியுள்ளன.

சிரியாவின் இன்னொரு கேந்திர இராணுவ நிலையமான லெபனானின் மத்திய மலைப் பிரதேசத்திலும் அமெரிக்க விமானங்கள் பலமான குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இதற்குப் பதிலடியாகச் சிரியாவும் தாக்குதலை மேற்கொண்டபோதும், இச் சண்டையில் ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் தெரியவில்லை. ஆயினும் இச்சேதங்கள் மிகக் குறைவாகவே இருக்குமென நம்பப்படுகிறது.

இதேவேளையில் லெபனானின் இன்னொரு பகுதியிலுள்ள சுமார் 4,000 வலதுசாரிக் கிறிஸ்தவர்களைக் காப்பாற்று

## அரபாத் வெளியேற்றத்துக்கு இஸ்ரேல் தொடர்ந்து எதிர்ப்பு

வதற்காக இஸ்ரேல் படைகள் 11,000 குரூஸ், முஸ்லிம் மக்களைச் சுற்றி வளைத்துள்ளனர்.

இதற்கிடையில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்தும் அவரது 4,000 போர் வீரர்களும் திரிப்பொலியிலிருந்து வெளியேறுவதனை இஸ்ரேல் தடுக்காதென அந்த நாட்டின் பிரதிப் பிரதமர் தெரிவித்த கருத்தினை இஸ்ரேலிய அரசாங்கம் நேற்று மறுத்துள்ளது. இக்கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தென்றும், ஆனால் யாஸீர் அரபாத்தும் அவரது ஆதரவாளர்களும் வெளியேறுவதனை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வருமென்றும் இஸ்ரேல் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. [சூ]

# நோபல் பரிசுபெற்ற வாலேஸா கைது!

வார்ஸோ, டிச. 1

இந்த ஆண்டு நோபல் சமாதானப் பரிசு பெற்றவரான திரு. லேக் வலேஸா போலந்தில் நேற்று அரசாங்க பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

போலந்து சொலிடாறிற்றி தொழிற்சங்கத் தலைவர் திரு. லேக்வாலேஸா போலந்தின் தென்பகுதி நகரொன்றில் தமது நோபல் பரிசு குறித்து ஆராதனையொன்றை நடத்திய பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே கைதானார்.

கைது செய்யப்படு முன்னர் திரு. வாலேஸா இரு மணி நேரம் பாதுகாப்பு அதிகாரிகளால் தொல்லைப்படுத்தப்பட்டார் என்று அவரது சகாக்கள் தெரிவித்தனர். திரு. வாலேஸா அரசுக்கெதிரான நடவடிக்கையொன்றில் ஈடுபடவிருந்தார் என்றே கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# எதிர்க்கட்சிகள் போராட்டம் தமிழக முதல்வர் 'கோரிக்கை!

(சென்னை)

விலைவாசி உயர்வினை எதிர்த்து தமிழ்நாட்டில் தி.மு.க. உட்பட 14 எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்த போராட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டாமென்று முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் கோரிக்கைவிடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் மறியல் போராட்டம் தொடர்பாக அவர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் உரையாற்றுகையில் இக்கோரிக்கையை விடுத்தார்.

''விலைவாசி உயர்வு பற்றி பேசும் எதிர்க்கட்சிகள் இக் காலப்பகுதியில் மக்களின் வருமானங்கள் அதிகரித்துள்ளமை பற்றிஎதுவும்குறிப்பிடவில்லை. உண்மையில் விலைவாசி உயர்வுக்கு மேலாக மக்களின் வருமானங்கள் உயர்ந்துள்ளமையை அவர்கள் உணர வேண்டும். ஆயினும் அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் எந்தவொரு போராட்ட நடவடிக்கைகளையும் அரசு முறியடிக்கும்'' என்று அவர் தமதுஉரையில் தெரிவித்தார்.

இதனிடையே எதிர்க்கட்சிகளின் போராட்டங்களையடுத்து நேற்று தமிழ்நாட்டில் பஸ், ரயில்கள் பொலிஸ் பாதுகாப்புடன் சேவைக்கு விடப்பட்டன. நகரின் முக்கியபகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இதுவரை நடந்த போராட்டங்களில் 10,000பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தி.மு.க. தலைவர் திரு. மு கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். (சூ)

## கொலம்பிய விமானம் வீழ்ந்து நொருங்கியது

லண்டன், டிச. 15

கொலம்பியா விமானமொன்று புகோட்டாவுக்கு அண்மையில் வீழ்ந்து நொருங்கியதில் 53பேர் மாண்டனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சரக்கு விமானம் என்ஜின் கோளாறு காரணமாகவே பழுதடைந்து புகோட்டாவுக்கு அண்மையிலுள்ள மெடனில் கைத்தொழில் ஆலையொன்றின்மீது வீழ்ந்தது. இதனால் ஆலையின் ஊழியர்கள் பலர் மரணமடைந்துள்ளனர். விமானத்தின் உதிரிப்பாகங்கள் பல்வேறு இடங்களிலும் சிதறியபோது அப்பகுதி மக்கள் பலரும் காயமடைந்துள்ளதாகவும் நம்பப்படுகிறது. [சூ]

## மீண்டும் சிகிச்சை

[மாவிட்டபுரம்]

மீண்டும் ஆரம்பமாகியுள்ள வல்லை லயன்ஸ் ஆஸ்பத்திரியில் பிள்ளைப்பேறு நிபுணர் டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன் விசேட சிகிச்சைகளை நாளை முதல் மேற்கொள்வார்.

## இந்திய - போலந்து வர்த்தகம்

புதுடில்லி, டிச. 15

இந்தியாவும், போலந்தும் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பெருமளவில் அதிகரித்து வருகின்றன.

1982ம் ஆண்டு இந்த இரு நாடுகளும் 125 கோடி ரூபாவுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டன. (சூ)

# ஈரானின் ஐந்து நகரங்களில் ஈராக் விமானங்கள் தாக்கு!

## குவைத் குண்டு வெடிப்புக்கு பதிலடியாம்

பக்தாத், டிச. 15

ஈரானின் ஐந்து பெரியநகரங்கள் மீது ஈராக் பலமான விமான, ஏவுகணைத்தாக்குதல்களை மேற்கொண்டதால் 20 ஈரானியர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 200பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

குவைத்தின் பலபகுதிகளிலும் ஈரான் மேற்கொண்ட குண்டுவெடிப்புக்கு பதிலடியாக இந்த இராணுவ தாக்குதலை ஈராக் மேற்கொண்டதாக ஈராக் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலினால் ஈரானின் 5 பெரிய நகரங்களும் பெருமளவு சேதத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் ஈரானியப்படைகள் பின்வாங்கியுள்ளதாகவும் ஈராக்கிய செய்தித்தாபனம் நேற்று அறிவித்துள்ளது.

குவைத்மீது ஈரான் மேற்கொண்ட குண்டுவெடிப்பினால் குவைத் விமான நிலையம், அமெரிக்க,பிரான்ஸ் தூதரகங்கள், ஒரு அமைச்சுக்கட்டிடம், பெற்ரோலிய நிலையம் என்பன சேதமடைந்ததுடன் 6 பேர் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (சூ)

## இந்திய ஜனாதிபதி ஸெயில்சிங் வெளிநாடு பயணம்!

புதுடில்லி, டிச. 15

இந்திய ஜனாதிபதி திரு. ஜானி ஸெயில்சிங் செக்கோசிலவாக்கியா, கட்டார், பஹ்றெய்ன் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இவர் இங்கு தங்கியிருக்கும் நாள்களில் இந்நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்தும், குறிப்பாக செக்கோசிலவாக்கியா அதிபருடன் சர்வதேச நிலைமைகள் குறித்தும் கருத்துக்களை பரிமாறவுள்ளார்.

ஜானி ஸெயில்சிங் இந்திய ஜனாதிபதியாக பதவிபெற்ற பின் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோகபூர்வ அரசமுறைப்பயணம்இதுவாகும். (சூ)

# பங்களாதேஷில் அரசியல் கைதிகள் விடுதலை!

டாக்கா, டிச. 15

பங்களாதேஷ் அரசுக்கெதிரான புரட்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டிக் கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்டுள்ள சகல அரசியல் தலைவர்களையும் விடுதலைசெய்யப்போவதாக ஜனாதிபதி திரு. ஏர்ஷாத் அறிவித்துள்ளார்.

இதுவரை கைதுசெய்யப்பட்டவர்களில் டாக்காவில் 120 பேரும், ஏனைய இடங்களில் 80 பேரும் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்களென்றும் அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷில் ஜனநாயகத்தினை மீண்டும் ஏற்படுத்தும் நடவடிக்கையின் முன்னோடியாகவே இது அமைந்துள்ளதெனவும் திரு. ஏர்ஷாத் தெரிவித்தார். [சூ]

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

### உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
   இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24810
2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
   இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23596
3. நியூ ப்ரசீதா
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
   தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
   468, காலி வீதி, கொழும்பு-3
   தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி, கொழும்பு-11.
தொலைபேசி: 23277

### மணிவாக்கு

அறமே ஆற்றல் என்பதை நம்புவோமாக; அந்த நம்பிக்கையில், நாம் அறிந்த கடமையைச் செய்யத் துணிவோமாக.

—ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## நம்பிக்கை ஒளி இழந்த லெபனுன்

இயல்பாகவே எதிலும் நம்பிக்கைஒளியைக்காணும் தன்மையினர் லெபனுன் மக்கள்.

அமெரிக்க ஜனதிபதி றீகன் அந்த நாட்டை 'ஒரு ஒளிவீசும் ஆபரணம்' என்று வர்ணித்தார்; அதுபட்டிருக்கும் மாசை நீக்கிவிடத்திட சங்கற்பம் கொண்டிருந்தார்.

அங்கு இதுவரையும் நடந்த படுகொலைகள், குண்டு வெடிப்புக்கள் - உலகில் எங்கும் கேள்விப்படாத பேரழிவுகள் நிலைத்திருந்த போதும் உயிர்தப்பியிருக்கும் இந்த நாட்டு மக்கள் தங்களுக்கு விடிவுவருமென்ற தெருள் நோக்கம் (optimism) கொண்டவர்கள்.

இன்றைய நிலை என்ன? அந்த ஒளி மங்கி மறைகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் என்றும் எதிர்பாராத ராணுவத் தாக்குதல்கள் இடம்பெற்றன. லெபனுனின் மத்திய மலைச்சாரலில் அமைந்திருந்த சிரிய ராணுவத் தளங்களில் இஸ்ரேலிய, அமெரிக்க விமானப் படைகள் பெருந்தாக்குதல்களை நடத்தியிருந்தன.

சிரியாவின் ராணுவப் படைகள் வெளியேறியே தீரவேண்டுமென்பது இவ்வித இஸ்ரேல் - அமெரிக்கா ஒருங்கிணைந்த தாக்குதலின் நோக்கம்.

சிரியாப் படைகள் லெபனுனில் தங்கியிருப்பது அன்றிருந்த லெபனுன் ஆட்சியின் கோரிக்கை காரணமாகவென்பது தெரிந்ததே; அரபு நாடுகளின் அமைதி பாதுகாக்கும் படையினரில் அங்கம் வகித்தலே சிரிய படைகளின் நோக்கம்.

சமாதானத்துக்கு அச்சுறுத்தலாயிருக்கும் இஸ்ரேலிய படைகள் முற்ருய் லெபனுனை விட்டு வெளியேறிய பின்னரே தாம் வெளியேறலாமென்பது அவர்களின் சபதம். இந்த நிலை இத்துரதிர்ஷ்டம் பிடித்த நாட்டுக்கு சாதகமானதே; நியாயமானதுங்கூட.

இதனைப் பொருட்படுத்தாது இஸ்ரேலும் அதன் பெருபகாரியாகிய அமெரிக்காவும் நடத்திய தாக்குதலில் இரண்டு அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தி அமெரிக்காவிற்கு ஆத்திரமூட்டுவது இயற்கை. ஆனால் இஸ்ரேல் -அமெரிக்க ஒத்துழைப்பு லெபனுனைத் தவிடுபொடியாக்கி விடுமோவென்ற அச்சம் உலக நாடுகளையே பிடித்திருக்கிறது.

ஐ. நா. அதிகாரத்தையும் கட்டளையையும் மீறி இஸ்ரேலிய துருப்புகள் லெபனுனின் ஒரு பகுதியில் இன்றும் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. ஈவிரக்கமின்றிய வெறியாட்டம் ஆடி பல்லாயிரம் லெபனுன் மக்களைக் கொன்று குவித்தபின்னரும் நாட்டைவிட்டு வெளியேற இஸ்ரேலுக்கு மனம்வரவில்லை.

இந்தப் பயங்கரமான பிடிவாத நிலைக்கு அமெரிக்காவின் ஆதரவே முக்கிய காரணம் என்பது பகிரங்க இரகசியம். அமெரிக்கா எவ்வாறு தன் படைகளை அங்கு நிறுத்தியது?

லெபனுனின் பாதுகாப்புக்கென்று வரவழைக்கப்பட்ட 'பல்தேச சமாதானப் படை'யில் ஒரு அங்கமாக வந்த அமெரிக்கப் படை, இன்று போர்புரியும் படையாக மாற்றம் பெற்றிருக்கின்றது.

லெபனுனை அழிக்க, இஸ்ரேலுக்கு உதவிபுரிய வேண்டுமென்ற நோக்கம் அமெரிக்க ஜனதிபதிக்கு உண்டென்று நாம் கருதவில்லை.

பெய்ரூட்டில் பி. எல். ஓ. வேரூன்றிவிடுமென்ற அச்சம் ஜனதிபதி றீகனை இவ்வித நியாயமற்ற செயலில் சடுபடுத்தியிருக்கிறது.

இன்று அந்த அச்சம் நீங்கிவிட்டது. லெபனுனைத் தொடர்ந்து தாக்கும் கொள்கை ஒன்று செயற்படுவதால், இன்றைய பெய்ரூட் ஆட்சிக்கு ஆதரவாகவும், அந்நாட்டின் பெரும்பான்மை முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் பலமளிக்கும் நோக்கமென்பது தெட்டத்தெளிவு. அவ்வித ஆதரவில் பலம்பெறும் செமாயலின் கிறிஸ்தவஆட்சி அமெரிக்காவின் மேற்கு ஆசியத் திட்டங்களுக்கு உதவியாகவிருக்குமென்பது ஜனதிபதி றீகனின் கனவெனலாம்.

பலஸ்தீனியரின் நாடு கோரும் இயக்கம் அழிக்கப்படுவதும், அரபு நாடுகளில் அமெரிக்க ஆதிக்கம் பரப்பப்படுவதும் அமெரிக்க ஜனதிபதியின் திட்டமென்று அஞ்சவேண்டியுள்ளது.

இவ்வித ஆதிக்கம், அரபு நாடுகளுக்கோ, பலஸ்தீனியரின் நெடுங்காலப் பிரச்னைக்கோ நன்மை பயக்காது.

இவ்வேளையில் மேற்காசிய அமைதிக்கு ஒருவழி காணவேண்டுமானுல், இன்று பி. எல். ஓ வில் இடம்பெறும் உட்பகையும், பிடுங்குப்பாடும் ஒழியவேண்டும். நல்லகாலம், அணிசேரா மாநாடு இதற்கொரு தீர்வு கண்டிருக்கிறது.

பி. எல். ஓ. ஒற்றுமை இறுகவேண்டும்; பி எல் ஓ. வும் சிரியாவும் ஒற்றுமைப் படவேண்டும். இவ்வித இணைப்பால் வரும் பலம் சுதந்திரம் விரும்பும் உலக மக்களின் ஆதரவுடன் மேற்காசியாவில் நிலவும் நீண்டகாலப் போர் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்

குருமாற்றம்

## விடிவு காலம் ஏற்படும்!

குரு என்னும் கிரகம் 17-12-83-ல் தனுராசிக்கு வருகிறது குரு தனது சொந்த வீடான தனுவிற்கு வரும் போது சந்திரன் மேடராசியில் இருக்கிறுர். இவர் வளர் சந்திரன் குருவிற்குத் திரிகோணத்திலிருந்து குருவின் பார்வையைப் பெறுகிறுர். இதைக் குருயோகம் என்றும் இதனுல் அதிக நன்மைகள் உண்டாகுமென்றும் ஜோதிட நூல்கள் கூறுகின்றன.

உலகோர்பட்ட இன்னல்களுக்கு இதுவோர் விடிவுகாலமாக அமையவேண்டுகிறேம். இதில் பழையன புதியனவாகவும் இகழ்ந்தவை புகழப் பெறுவதாகவும் மாறும் ஆகிலும் சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்யும் இலங்கையை நோக்குமிடத்து இதிலொரு மாற்றம் சுகமாக நடக்க இடமிருக்கிறது. அதற்கு குருவை சந்திரனைச் செவ்வாயும் சனியும் நோக்குகின்றன. இதனுல் குறைபாடுகள் குழப்பங்கள் ஏற்படவும் எதிர்ப்புகள் ஏற்பவும் இடமிருக்கிறது. இதற்குரிய ஜோதிட சாஸ்த்திர யோசனைகளின் படி குருவிற்கும் சனிக்குமிடையில் கேது உச்சம் பெற்றிருக்கிறது. இந்தக் கேது அந்நியக்கிரகம் இதனுல் அந்நிய தேசத்தலைவர்களும் இலங்கையில் நடைபெறும் சமாதானக் கூட்டத்தில் கலந்து கொள்ள வைத்தால் இலங்கை கூடிய நன்மையைப் பெறும். இந்த நன்மை தமிழர் சிங்களவர் என்று இல்லாது இருபகுதி யாருக்கும்பொதுவான நன்மையாகவே இருக்கும்.

1939-ம் ஆண்டு சனி குரு மீனத்திலிருக்க யுத்தம் தொடங்கி 1946-ம் ஆண்டு சனிக்குக் குரு ஒரு வீடு முன் தள்ளி இருக்க உலகத்தில் சமாதானம் உண்டானது. அதுபோல் தற்போதும் கிரக அமைப்பு அமைந்துள்ளது. இந்தச் சமாதானப் பேச்சில் முடிவு நல்ல படியாக அமைவதற்குப் பிறதேசத் தலைவர்களும் இதில் கலப்பது கூடிய நன்மையைத் தரும்.

இதுவரை காலமும் விருச்சிக ராசியாகிய அட்டம ராசியில் சஞ்சரித்து மிகவும் துன்ப பலன்களைக் கொடுத்து வந்த வியாழன், இனி தனுராசியாகிய சொந்த வீட்டில் திரிகோண ராசியில் பலம் பெற்றுச் சஞ்சரிப்பதால் கூடிய பகுதி உலகிற்கு நன்மைகளைபே தர இருக்கிறது.

சோதிடர்

ஸ்ரீ. வே. த. மயில்வாகனம்

## வவனியா மாவட்ட குடும்ப நலத்தொண்டர் மாநாடு

(வவனியா)

வவனியா மாவட்ட குடும்ப நலத் தொண்டர் மகாநாடு காமினி வித்தியாசாலையில் நடந்தது.

குடும்ப நல மாவட்டத் தலைவர் டாக்டர் ஐ. ஞானேஸ்வரன் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது.

தொண்டர்களைக் கெளரவிக்கும் நோக்குடனேயே வருடாந்த தொண்டர் மகாநாடு நடைபெறுகின்றது.

மன்னுர் மாவட்ட அரச அதிபர் திரு. எஸ். செந்தில்நாதன், குடும்பத்திட்டசங்க நிர்வாகப் பணிப்பாளர் திரு. தயா அபயவிக்கிரம, திட்டப் பணிப்பாளர் திரு. திஸாநாயக்கர், தகவல்பிரிவு அதிகாரி திருமதி யோகா பாலச்சந்திரன், வைத்தியகலாநிதி எஸ். நிரஞ்சன் ஆகியோரும் வைபவத்தில் பேசினுர்கள்.

பெருமளவு தொண்டர்கள் கலந்துகொண்டனர். தொண்டர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வவனியா மாவட்ட குடும்ப நலத் திட்ட அதிகாரி திரு. எஸ். ஜெகதீஸ்வரன் இது தொடர்பான ஏற்பாடுகளை மிகவும் சிறப்பான முறையில் செய்திருந்தார்.

### கிளிநொச்சியில் கைலாசபதிக்கு அஞ்சலி

[கிளிநொச்சி]

''புகழுடம்பு தாங்கிய அறிஞர்களின் ஆன்மா என்றுமே அழிவதில்லை'' என்று பரந்தன் இரசாயனக் கலைக்கழகம் நடத்திய அமரர் கே. கைலாசபதியின் ஓராண்டு அஞ்சலிக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்துகையில் திரு. செவ்வந்தி மகாலிங்கம் குறிப்பிட்டார். இரசாயனக்கலைக்கழகத் தலைவர் திரு. கே எஸ். வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் செவ்வந்தி மகாலிங்கம் மேலும் பேசுகையில்:- வாய்மையும், உண்மையும் நிறைந்த அமரர் கைலாசபதியின் இலக்கியங்கள் சாகாவரம் பெற்றவை'' என்ருர். [கு]

### மணிவாசகர் விழா

[மாவிட்டபுரம்]

குப்பிளான் கற்பகரைப்பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பா பூசையுடன் மணிவாசகர் விழாவும் நடத்தப்படுகிறது.

திங்கட்கிழமை முதல் அதிகாலையில் விசேட பூசைகள் நடாத்தப்பட்டு மணிவாசகர் வீதிவலம் வருவதும் நடைபெற்று வருகிறது.

மாவிட்டபுரம் தலையிட்டி ஞானவைரவர் ஆலயத்தில் தினம் நடைபெறும் உற்சவத்துடன் அதிகாலையில் திருவெம்பாப் பூசையும் நடைபெற்று வருகிறது

இம்மாதம் 21-ம் திகதி ஆர்த்திரா தரிசன விழாவைச் சிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிச் சிந்தனை

## சமய அறிவு

உலகியல் அறிவுமுதிராத குழந்தைகக்கு முன் சில பல காரங்களையும் தங்கநகையையும் வைத்தால் அக்குழந்தை பலகாரங்களையே எடுக்கும். இக்குழந்தையைப் போலவே ஒவ்வொருவரும் தம்தம் அறிவுக்கு ஏற்றவண்ணமே ஒவ்வொவ்வொன்றையும் விளங்கிக் கொள்வர்.

தொல்காப்பியம் கம்பராமாயணம், சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் எவ்வளவு சிறப்புடையனவாயினும் அவற்றை விளங்கி இரசித்து மகிழும் தகுதியற்றவர்களுக்கு அவைபயன்படாதது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்களில் வெறுப்பையும் கொடுக்கும்.

சிவபெருமானின் இயல்பையும் மகிமையையும் அருளிப்பாட்டையும் விளங்கிக்கொள்ளும் இயல்பில்லாத பலர் சிவபிரானிடம் மதிப்பும் அன்பும் இருந்தபோதும் கூட சிவ வழிபாட்டில் ஈடுபட மறுக்கின்ருர்கள். ''சிவபெருமானை வழிபட்டால் இல்லறம் சிறக்காது; துறவியாய்த்தான் போக வேண்டிவரும்'' என்றும் ''நடராஜர் படத்தை வீட்டில் வைத்து வழிபடலாகாது'' என்றும் நம்புகிருர்கள்.

சிவபாதவிருதயர் சீர்காழியில் சிவ வழிபாடுசெய்தே எவ்வுலகும் தொழத்தக்கப் புத்திர பேற்றை அடைந்தார். சுந்தரர் சிவானுக்கிரகத்தால் தான் விரும்பிய பெண்களை மணந்துகொண்டதுமன்றி, தான் விரும்பியபோதெல்லாம் பொன்னும் பொருளும்பெற்று மகிழ்ந்தார்.

மனிதநிலைக்கு மிகமேலான பக்குவத்தை அடைந்த நாயன்மார் மட்டுமன்றி வஞ்சனை, பொய்மை முதலிய தீங்குகளற்றவர்களாய் வாழ்ந்த நம்முன்னேர்பலர் சிவவழிபாட்டால் சிறப்புற்றிருக்கின்றனர்.

திருமணத்துக்குப் பணம் வேண்டும். பாண்டியன் கட்டிய பொன்முடிப்பை எனக்குக்கிடைக்கச் செய்யும் என்று வணங்கிய தருமி என்னும் அந்தணனுக்காக மதுரைச் சொக்கநாதப் பெருமான் ''கொங்குதேர் வாழ்க்கை...'' என்ற பாடலைவழங்கியதை தமிழுலகும் சைவஉலகும் நன்கு அறியும்.

இந்தியாவில் பலவகையான சீரும் சிறப்பும் பெற்றுவாழும் வைசிய குலத்தினர் (செட்டிமார்) தேவாரப்பாடல் பெற்ற சிவாலயங்களில் திருப்பணி பூசைவழிபாடு என்பனவற்றைச் செய்பவர்களே. இவர்களைப்போல இங்கும் பலர் சிவவழிபாட்டால் சிறப்புற்றிருக்கின்ருர்கள்.

விநாயக வழிபாடு, முருக வழிபாடு, அம்பிகை வழிபாடு என்பன சிவ வழிபாட்டிற்கோ சைவசமயத்துக்கோ விரோதமானவையன்று. விநாயக வழிபாட்டை விசேடமாகச் செய்த நம்பியாண்டார் நம்பி ஒளவையார் போன்ருேரும், முருகவழிபாட்டினுல் சிறந்த அருணகிரிநாதர், அம்பிகை வழிபாட்டால் உயர்ந்த குமரகுருபரர் காளமேகம் போன்றவர்கள் சைவசமயிகளாய்விளங்குவதிலிருந்து சைவசமயத்திற்கு இவ் வழிபாடுகள் புறம்பானதன்று என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனுல்;

சைவசமயிகள் மத்தியில் சிவ வழிபாடு பற்றி விநோதமான விபரீதமான அபிப்பிராயம் இருக்கலாகாது மாலையில் தான் சிவதரிசனம் செய்ய வேண்டும் காலையில் சிவதரிசனம் செய்தலாகாது என்று பலர் நினைக்கிருர்கள். இப்படியாக நினைப்பதற்கு உண்மை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

யான காரணம் சைவசமய அடிப்படை அறிவு ஒவ்வொருவருக்கும் இல்லாததேயாகும்.

இக்காலத்தில் சைவசமயிகள் பலர் செவிவழியான அங்கொன்றும் இங்கொன்றுமான சமயக்கருத்துகளை மட்டும் அறிந்துவைத்துக்கொண்டு ''நாம் சைவசமயிகள்'' என்று வாழ்வது மட்டுமன்றி பல சந்தர்ப்பங்கள் சைவ சமயம் பற்றிய முடிவுகளை வெளியிடவும் முன்வருகின்ருர்கள். இதனுல் பலருக்கு சைவசமயமும் தெரிவதில்லை. பிற சமயமும் புரிவதில்லை.

''மழை வழங்குக
மன்னவ ஞேங்குக
பிழையில் பல்வளன்
எங்கும் பெருகுக
தழைக அஞ்செலுத்
தோசை தரையெல்லாம்
பழைய வைதீக
சைவம் பரக்கவே''
— கோயிற் புராணம்

— அருளாளன்.

## வல்லை லயன்ஸ் ஆஸ்பத்திரிக்கு
# தாராள நிதி உதவி

(மாவிட்டபுரம்)

அண்மையில் ஆரம்பிக்கப் பட்ட வல்லை லயன்ஸ் வைத்தியசாலைக்கு பல சமூக நிறுவனங்கள் நிதிஉதவி வழங்கியுள்ளன.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி வைத்திய சாலை வளர்ச்சிக்காக யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வைத்தியசாலையில் கிளை ஒன்றை ஆரம்பித்து அங்குள்ளவர்களுக்கு இலவசமாக பால், பிஸ்கட் வழங்குவதுடன் 15ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் வைத்திய சேவைக்கு தேவையான சாதனங்களை வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலைக்கு விஜயம் செய்த நோர்வே நாட்டுக்குழுவினர் வைத்தியசாலையைப் பார்வையிட்டபின்னர் 11,600 ரூபா வழங்கியதுடன் மேலும் உதவிகளை வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினரும் மேற்படி வைத்தியசாலை வளர்ச்சிக்கென 10,000ரூபா வழங்கியுள்ளனர்.

வைத்தியசாலையில்பெண்கள் மகப்பேறு நிபுணர் டாக்டர் எஸ், பாலகிருஸ்னனும், காது மூக்கு, கண் நிபுணர் டாக்டர் எஸ். ஜெயராஜனும், குழந்தைப்பிள்ளை வைத்திய நிபுணர்களும் விஜயம் செய்வதாகவும் மேலும் பல்துறை வைத்திய நிபுணர்கள் வர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

அம்புலன்ஸ் சேவையுடன் பிள்ளைப்பேறு வைத்தியம் நடாத்தப்படுவதாகவும், சிறு சிறு சத்திர சிகிச்சைகளும் நடைபெறுவதாகவும் மேற்படி வைத்தியசாலையை நடாத்திவரும் மாவிட்டபுரம்லயன்ஸ் கழகத்தலைவர் திரு. ஆர். மனோகரனும் வைத்தியப்பிரிவு தலைவர் டாக்டர் எஸ். பத்மநாதனும் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

## பிரச்னை: ஒரு குழந்தை
# இரு பெண்களின் சண்டை: வயோதிபர் பலியானர்!
## யாழ். நீதிமன்றத்தில் விசாரணை

(நல்லூர்)

ஒரு குழந்தை தொடர்பாக இரு பெண்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம், அவர்களின் சகோதரர்களிடையே மோதலை ஏற்படுத்தி, ஈற்றில் அம்மோதலைத் தடுக்கச்சென்ற முதியவருக்கு மரணத்தை விளைவித்தது

யாழ்ப்பாணம் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் ஆனைக்கோட்டை கொலைசம்பந்தமாக நடைபெற்றதுகொலை வழக்கு விசாரணையில் இத்தகவல் வெளியானது. இவ்வழக்கில் நாகன் சின்னத்தம்பி என்பவரை இவ்வாண்டு ஜூலை மாதம் 22ம்நாளன்று வாளால் வெட்டிக் கொலை செய்ததாக திருக்குமார் என்ற இளைஞனுக்கெதிராகப் பொலிசாரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வழக்குத் தொடுநர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர் தவராசாவின் நெறிப்படுத்தலின் கீழ் சாட்சியம் அளித்த எஸ். ஞானேஸ்வரன் பின்வருமாறு கூறினர்.

காலஞ்சென்ற நாகன் சின்னத்தம்பி எனது தந்தையார் எதிரி எனது நெருங்கிய உறவினர். அயல் வீட்டில் வாழ்கிறர். சம்பவதினமன்று மாலை ஒரு குழந்தை சம்பந்தமாக எனது சகோதரிக்கும் எதிரியின் சகோதரிக்குமிடையில் தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் அன்று இரவு ஒன்பது மணியளவில் எனது சகோதரர் கடைக்குச் செல்லப் புறப்பட்டார். வாயிலுக்குச் சென்றதும் அவர் உரத்த குரலில் ஐயோ என்று அலறினர். இவ் அழுகைக் குரலைக் கேட்ட தந்தை துடித்துப் போய் வாசலுக்கு ஓடினர். வாசலுக்கு ஓடிய தந்தை யாரும் 'ஐயோ' என்று அலறினர்.

அப்போது நானும் வாசலுக்கு ஓடினேன். அங்கே தகப்பனர் தலையில் காயத்துடன் கீழே வீழ்ந்து கிடப்பதைக்கண்டேன். திருக்குமார் தன்னை வாளால் வெட்டியதாகத் தந்தையார் என்னிடம் கூறியழுதார். நான் அவரைத் தூக்கி எனது மடியில் வைத்து ஆறுதல் கூறித் தகப்பனரின் தலையில் ஏற்பட்ட காயத்துக்குக் கட்டுப்போட முயன்ற வேளையில் மீண்டும் அங்கு வந்த எதிரி என்னை இரும்புக்கம்பியால்தாக்கினர். எனக்கு இடது நெற்றிப்புருவத்திலும், வலது முழங்கையிலும் இதனல் காயம் ஏற்பட்டது. அயலாரின் உதவியுடன் ஆஸ்பத்திரி சென்றேம். தகப்பனும், நானும் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற்றேம். ஆஸ்பத்திரியில்சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் தகப்பனர் காலமானர்'' என்று சாட்சி கூறினர். எதிரியின் சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் ஆஜராகியிருந்தார். இக்கட்டத்தில் விசாரணை ஒத்திவைக்கப் பட்டது.

# மூன்று வருடங்களாகியும் பரீட்சைமுடிவுகள் வரவில்லை!
## அதிபர்பதவிகளுக்கு தோற்றியவர்நிலை

(மானிப்பாய்)

எதுவித பரீட்சையும் எடுக்காமலிருந்த பதில் அதிபர்களுக்கு நாலாந்தர அதிபர் பதவி வழங்கப்பட்டபின், பரீட்சை எடுத்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் சிலருக்கு ஐந்தாந்தர அதிபர் பதவி கிடைத்தது அநீதியானதென்றும், 1978ம் ஆண்டுப் பரீட்சை எடுத்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பலருக்கு இன்னும் அதிபர் பதவி வழங்கப் படாமலிருப்பது பற்றியும் கல்வியமைச்சரைச் சந்திக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் மாவட்டப்பிரசாரச் செயலாளர் திரு. ந. சிவபாதம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

பிரசாரச் செயலாளர் தமது கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

1980ம் ஆண்டு 4ம், 5ம் தர அதிபர் பதவிக்குப் பரீட்சை நடந்தும் இதுவரை பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை. மூன்றாண்டுகள் காத்திருக்கும் இப்பரீட்சார்த்திகளுக்கு உரிய பரீட்சைப் பெறுபேறுகளை உடனடியாக அறிவித்து அதிபர் பதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கவும், 1980 சித்திரையில் பதில் அதிபர்களாக இருந்து பதவியுயர்வு கிடைக்காது மேன்முறையீடுசெய்த ஆசிரியர்களுக்குப் பதவி வழங்கப் படவேண்டும்.

வாழ்க்கைச் செலவு மோசமான நிலையில் உயர்ந்துள்ள இவ்வேளையில் சம்பள மீளாய்வுக் கமிஷனின் அறிக்கையை இம்மாத இறுதியில் வெளியிட்டு பாதிப்புற்ற நிலையிலிருக்கும் ஆசிரியர்களுக்குப் பரிகாரமளிக்குமாறும் இவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜூலை வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களது நிலை சம்பந்தமாக இரண்டாவது தடவையாகக் கல்வியமைச்சரைச் சந்திக்கவிருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் விசேஷ குழு இப்பிரச்னை பற்றியும் அமைச்சரிடம் தெரியப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமெனவும் திரு. சிவபாதம் தமது வேண்டுகோளில் கேட்டுள்ளார்.

# மானிப்பாய் பாடசாலைகள் 4 வலயங்களாக பிரிப்பு!

(மாவிட்டபுரம்)

மானிப்பாய் கல்வி வட்டாரப்பாடசாலைகள் 4 வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

புதுக்கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப்படும்போது மானிப்பாய் கல்விவட்டாரத்தில் உள்ளபாடசாலைகளை 4 வலயங்களாக பிரித்து செயல் படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி குப்பிளான் சுன்ணுகம், ஏழாலைப்பகுதிப்பாடசாலைக்கு சுன்ணுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிமுதன்மை பாடசாலையாக விளங்கும். இணுவில், உடுவில், தாவடி பகுதிப்பாடசாலைகளுக்கு இணுவில் - மருதனமடம் இராமநாதன் கல்லூரி முதன்மை பாடசாலையாக விளங்கும்.

(8-ம் பக்கம் பார்க்க

## மாடிக்கட்டடம் அரங்கு

(மாவிட்டபுரம்)

இணுவில் அமரிக்கன் மிஸன் தமிழ் கலவன் பாடசாலையில் பல லட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டிடமும் அரங்கு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

இணுவில் பகுதியில் 1000

(8-ம் பக்கம் பார்க்க)


வங்கிச் சேவைகள் போட்டிப் பரீட்சை

வங்கிகளுக்கான

எழுதுவினைஞர், உதவிக் காசாளர் தேர்வு

**போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புகள்**

**ஆரம்பம் 18-12-83**

பாடநெறிகள் :

பொதுஉளச்சார்பு : பொது அறிவு

காலம் : ஒரு மாதம் கட்டணம்: ரூபா 120/-

- திறமை வாய்ந்த ஆசிரிய குழுவின் ஒருங்கிணைந்த சேவை,
- இலவச அச்சடித்த பயிற்சிக் குறிப்புகள்.

தபால்மூலம் பாடநெறிக் குறிப்புகளைப் பெற விரும்புவோர் ASTAN INSTITUTE, JAFFNA என்ற விலாசத்திற்கு ரூபா 70/- காசுக்கட்டளையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு :

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD — JAFFNA.



**உண்ண உண்ண சுவை தரும் சோறும் கறியும் தருவது அஜி-நொ-மோட்டோ!**

உங்கள் சோறு கறி உணவு ஆவலைத் தூண்டும் அற்புத ருசி கொண்டதாக மாற அஜி-நொ-மோட்டோவின் துணையை நாடுங்கள். சோறு, கறி, சம்பல், பொரியல் எதுவானலும் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி-நொ-மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும். மேற்பட்ட மக்கள் பாவிக்கிருர்கள்.




சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு
விலை: ரூ.1/20ல் இருந்து

**அஜி-நொ-மோட்டோ®**

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0008

ஈவினை இளைஞன் மர்ம மரணம்

# சகோதரியும் தம்பியும் பிணையில் அனுமதி

(மாவிட்டபுரம்)

ஈவினை இளைஞன் மர்மமரணம் குறித்த இளைஞனின் தம்பியாரையும், சகோரியையும் 200ரூபா பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி அனுமதி வழங்கினுர்.

புன்னுலைக்கட்டுவன் ஈவினையைச்சேர்ந்த 24 வயதுடைய செ. கமலநாதன் என்பவரின் மரண விசாரணையையடுத்து மல்லாகம் நீதிபதி மேற்படி இளைஞனின் தம்பியாரை றிமாண்டில் வைத்து சகோதரியை சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தும், இளைஞனின் உள்உறுப்புக்கள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டதும் வாசகர் அறிந்ததே. நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் இருவரையும் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மேற்கொண்டு விசாரணை நடத்தும்படி சுன்னுகம் பொலிசாருக்கு உத்தரவிட்டு மேல்விசாரணையை ஜனவரி மாதம் 3ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவ்வழக்கை பார்க்க ஏராளமானவர்கள் நீதிமன்றில் கூடி மருந்தனர்.

## கைப்பணிப் பொருட்காட்சி

(வவனியா)

கைப்பணிப் பொருட்காட்சியினை வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் சம்பிரதாயமுறைப்படி திறந்து வைத்தார்.

வவனியாக் கூட்டுறவுக் கல்லூரியில் கைப்பணிப் பொருட்காட்சி நடந்தது

திறப்பு விழா வைபவத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ் தில்லைநடராஜா, கல்லூரி அதிபர் திரு. ஏ. மகேஸ்வரா, மகளிர் குழுத் தலைவி செல்வி ரி. வசந்தி, வ. தெ. த. பிரிவுச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஞானப்பிரகாசம், உட்படப் பல அரச உயர் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

அலங்காரப் பொருட்டகள், தைக்கப்பட்ட ஆடைவகை, அலங்கார கேக்வகைகள், சோயா உணவு வகைகள் இப்படி பலதரப்பட்ட பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது.

## சமூகப்பணிக்குழு அங்குரார்ப்பணம்

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் சமூகப் பணிகளுக்கான குழு ஒன்று அருட்திரு ஜே பி. தேவராஜா தலைமையில் கடந்த திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ்வங்குரார்ப்பண வைபவத்தில் மன்னுர் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம். முன்னுள் மன்னுர் எம். பி திரு. பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இவ்வங்குரார்ப்பண வைபவத்தின்போது அகதிகள் பராமரிப்புப் பணி, புனர்வாழ்வுத் திட்டம், மன்னுர் மாவட்ட கிராமிய மட்டத்திலான தேவைகள் என்பனபற்றி ஆராயப்பட்டன. (கி)

மன்னுரில்

# மாதிரிக் கிராமத்தை பிரதமர் திறந்துவைப்பார்!

(மன்னுர்)

மன்னுர் — நறுவலிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் 50 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமத்தை பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாச வரும் ஜனவரி மாதம் பிற்பகுதியில் திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மன்னுர் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற மாதிரிக்கிராம அமைப்புக் கூட்டத்தில் மன்னுர் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. பரமேஸ்வரன் வீடமைப்பு அதிகார சபையின் மன்னுர் மாவட்ட முகாமையாளர் திரு. யோசப்மரியாள் மன்னுர் திட்டமிடல் உதவி உதவி பணிப்பாளர் திரு. எஸ். ரங்கராஜா ஆகியோர் உட்பட சகல திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் சர்வோதய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் இக்கூட்டத்திலேயே இவ்விபரம் தெரிவிக்கப்பட்டது.

நறுவலிக்குளம் மாதிரிக் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள 50 வீடுகளில் 30 வீடுகளின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மிகுதி 20 வீடுகளின் நிர்மாண வேலைகள்யாவும் எதிர் வரும் ஜனவரி மாதம் 15-ம் திகதிக்குமுன் பூர்த்தியாகிவிடும்.

இம் மாதிரி கிராமத்தில் சர்வோதய இயக்கத்தினரால் இம்மாத இறுதிக்குள் சன சமூக நிலையக்கட்டிடம் ஒன்று அமைக்கப்படும்.


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES
(PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு



K. T. M. TOURS

தினசரி சொகுசு பஸ் சேவை

கொழும்பு — யாழ்ப்பாணம் — காரைநகர்
யாழ்ப்பாணம் — கொழும்பு

இன்று 16-12-83 வெள்ளி முதல் எமது இரவு பஸ்சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேம். கொழும்பு பஸ் வெள்ளவத்தைவரை சென்றடையும்.

புறப்படும் நேரம்:

கொழும்பு — இரவு 7-30 — புகையிரத ஸ்தானம்
யாழ்ப்பாணம் — இரவு 7-30 — C. S. K. மில்

ஆசனம் பதிவுசெய்யும் இடங்கள்:

யாழ்ப்பாணம்

(1) குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்
148 நவீன சந்தை,
மத்திய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி;— 24003

(2) கீதா மொட்ஸ் சென்ரர்
143, 144, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24390

(3) லிங்கம் ஸ்ரோர்ஸ்
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23576

கொழும்பு

அஜந்தாஹோட்டல் லிமிட்டெட்
No:- 125, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு - 11
தொலைபேசி; 28089, 32769

பிரயாணிகள் அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேம். நன்றி
K. T. M. TOURS

மேலதிக விபரங்களுக்கு : யாழ்ப்பாணம்
குமரன் ரெக்ஸ்ரைல்ஸ்
148, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24003 23736

கொழும்பு
நியூகொழும்பு றேடர்ஸ்
32, St. JOHNS STREET,
COLOMBO - 11.
T. P. No. 549428

(10567)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00
கமல்-ஸ்ரீதேவி
இக்க சுமிதா
**மூன்றும்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்
பால் இனிய இசையால்...
சிறந்த கதையால்
உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 8 காட்சிகள்
IRON MAN
ACTION THIRILL

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 8 காட்சிகள்
சிவாஜி - விஜயா
**நெஞ்சிருக்கும் வரை**

**Rajah** JAFFNA
From 16-12-83
Daily 10-30 2-00 4-30
6-30 and 8-30
Jackie Chan in His First
American Spectacular
BATTLE CREEK BRAWL
(Color Scope)
An adventures Action
Packed Karate Film
which you would have
ever seen before
குறிப்பிட்ட தினங்க
ளுக்கு மட்டும்

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில்
தேன்சிந்தும் அமுத ராக
மாய், காதலின் அமர
காவியமாய் பார்ப்பவ
ரைப் பரவசமூட்டி -
மீண்டும் பார்க்
கத்தூண்டும் - சிந்திக்க
வைக்கும் - அதி உன்னத
காதல் ஓவியமாய் பவனி
வந்த வண்ணத்திரை
விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**Regal** இன்றுமட்டும்
Daily 10-0, 2-30, 4-45
7-00 p.3m Only
பரபரப்பான
காதல் விவகாரம்...
தன் பணத்தால் எதை
யும் செய்யக்கூடிய வல்
லமைபொருந்திய கிரேக்க
தேசத்து கோடீஸ்வர
னும், பிரபல்யம் வாய்ந்த
முதல் பெண்ணும் ஆகிய
ஓனசிஸ் - ஜாக்குலின்
கென்னடியின் காதலை சித்
தரிக்கும் காவியம்
Anthony Quinn......
Jacqueline Bisset...... in
The
Greek Tycoon
(Color)
வெகு விரைவில்
**பயணங்கள்**
**முடிவதில்லை**

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 1-ம் திகதி
வெள்ளிக்கிழமை
16-12-88

மேடம்: அவசரபுத்தியினால் விபரீதங்கள் விளையலாம். தொழில் புரியும் இடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல்வாங்கல் விடயத்தில் மனக்கசப்புகள் ஏற்படலாம்.

இடபம்: இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம் பெறும், நீண்டநாள் பிணக்கு ஒன்று நிவர்த்தியாகும், உறவு முறைகளின் ஒத்துழைப்பு தாராளமாகக் கிடைக்கும்.

மிதுனம்: குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும், தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும், கண்துடைப்புவேலைகள் இடம்பெறும். கவனம் வேண்டும், பொறுமையே சிறந்தது.

கடகம்: மாதுருவழிப்பெருமைக்கு இடமுண்டு. எண்ணம் போல் யாவும்நடக்கும், இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டங்களும் இடம் பெறலாம்.

சிங்கம்: நேர்முகப் பரீட்சைக்கு உகந்ததினம், தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும், கணவன் மனைவி உறவு மிகவும் இறுக்கமாக இருக்கும், மகிழ்ச்சியான தினம்.

கன்னி: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும், இருள் சூழ்ந்த நிலையொன்று மீண்டும் சிந்தனையை வேதனைப் படுத்தும், தொழில் விடயங்களில் அதிக கவனம்நன்று

துலாம்: காதலர்களுக்கு கற்கண்டானதினம், குடும்பத்தில் கொண்டாட்டங்களும் இடம் பெறும், எதிர்பார்த்த கடிதம் இன்று இதயத்தை இன்பக் கடலில் ஆழ்த்தும்.

விருச்சிகம்: அரசபயத்திற்கு இடமுண்டு, வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளவேண்டாம், மின்னியல் பொறியியல் பகுதியில் கடமை புரிவோர் கவனம் வேண்டும்.

தனுசு: பெரியோர் உங்களை பாராட்டுவர், குரு பக்திமேலிடும். பிதாவழியால் பெருமைக்கிடமுண்டு, தொழில் புரியும் இடத்தில் மேலிட மதிப்பைப் பெறுவீர்.

மகரம்: உல்லாசப் பயணங்களும் உருவாகலாம், இடப்பிரிவுகள் இதயத்திற்கு இதமாக அமையும், தொழில்விடயங்கள் பெரும்புகழைத் தேடித்தரும், மகிழ்ச்சியான தினம்.

கும்பம்: பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் தென்படும், வணிகர்களுக்கு உகந்ததினம், நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும்

மீனம்: நிதி முடக்கமும் கடன்தொல்லையும், வீண்பெயரும் உண்டாகும், விஷமிகள் புதிய உரு எடுப்பர். விந்தையான போக்கு வேடிக்கைகாட்டும், நிதானமும் அமைதியும் நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# இலக்கண விஞவிடை

[பண்டத்தரிப்பு]

வண்ணை. சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு நாவலரின் ''இலக்கண விஞவிடை'' என்னும் நூலை வெளியிட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டு விழாவும், கட்டுரைப் போட்டி பரிசளிப்பு வைபவமும் இம்மாதம்3ந்திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை. சாந்தையர் மட ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் சைவ அபிவிருத்திக் கழகத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு இலக்கண விஞவிடை நூலின் முதற் பிரதியை சாந்தி அச்சக உரிமையாளர் திரு தி நாகரத்தினத்திடம் வழங்கினர்.

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - பாரதி
**உங்கள் விருப்பம்**
விரைவில்
DEATH HUNT

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க**
**நேரமில்லை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**எங்க தங்க ராஜா**

இன்னும் 5 தினங்கள்மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி —K. R. விஜயா,
மாதவி, சுருளிராஜன்,
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
திறம்பட நடித்த,
வர்ணப் படம்
**சத்திய சுந்தரம்**

# சான்றிதழ்கள் பெற்றனர்

(மன்னார்)

பேசாலை பாத்திமா மகா வித்தியாலயத்தில் முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைந்த 25 அங்கத்தவர்களுக்கும் சான்றிதழ்களும், இலச்சினைகளும் வழங்கப்பட்டன.

சென். ஜோன் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் திரு. ஏ. எப். இராஜசிங்கம், அத்தியட்சகர் ஜனாப் எஸ். ஏ. சகாப்தீன் ஆகியோர் கடந்த புதன்கிழமை இவற்றை வழங்கினர்.

இவ்வைபவத்தில் பேசாலை பாத்திமா மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு. ஏ. எப். பங்கிராஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். [கி]

# கல்முனைவரை பஸ் சேவை

[சுண்டிக்குளி]

யாழ். நகரில் இருந்து மட்டு நகருக்குத் தினமும் இரு பஸ் சேவைகள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் நடாத்தப்படுகிறது. அதில் ஒன்று கல்முனைவரை செல்கிறது.

நீண்டநாட்களாக இடைநிறுத்தப்பட்ட பருத்தித்துறை - கொக்கிளாய் பஸ் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கும் பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போதிய பஸ்கள் இல்லாதினால் மற்றைய சேவைகள் நடாத்த முடியவில்லை என வடபிரதேச போ. ச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# விலைப்பட்டியல் இல்லை!

## ரூ. ஆயிரம் அபராதம்! -ஒத்திவைப்பு சிறையும்!!

(நல்லூர்)

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டத்தின்கீழ் கடையில் விற்பனையாகிய மைசூர் பருப்பின் விலைப்பட்டியலை முன்வைக்கத் தவறிய கடைச்சிப்பந்தி, கடை உரிமையாளர் இருவருக்கும் எதிராக விலைக்கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிகள் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தனர்.

கடை உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவே கடைச்சிப்பந்திக்கு எதிரான குற்றத்தை விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் வாபஸ் வாங்கினர். இதனைத்தொடர்ந்து கடை உரிமையாளருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி எஸ். நாகராசா ஆறு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 4மாத கடுங்காவல் சிறைத்தண்டனையையும் விதித்தார்.

# வவனியா விவசாயிகள் பிரச்னைகளை அறிந்தார்!

(வவனியா)

விவசாய அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் திரு. ரஞ்சன் விஜயரத்தின இரு நாள் விஜயத்தினை மேற்கொண்டு வவனியா மாவட்டத்துக்கு வந்திருந்தார்.

செட்டிகுளம், பம்பைமடு, மடுக்கந்த பகுதி கமநல சேவை நிலையங்களுக்கும், செக்கடிபுலவு, பூவரசன் குளம், தச்சன்குளம் பகுதி தொடர்பு கமக்காரர் களுடைய பண்ணைகளுக்கும் விஜயம் செய்தார்.

இவரது இரு நாள் விஜயத்தின்போது பல்தரப்பட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

விவசாய மக்களினால் நல்ல வரவேற்பும் அளிக்கப்பட்டது.

விவசாயப்பகுதி மாணவர்களுடைய பிரச்னைகளை அறிந்துகொண்டார்.

நெடுங்கேணி — நயினமடு மடுவில் பத்து லட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட குளத்தையும் பார்வையிட்டார்.

வவனியா பகுதியில் விவசாய நீர்ப்பாசன வேலைக்கு 144 லட்சம் செலவு செய்யப்பட்டது எனவும் இவர் தெரிவித்தார்.

110 லட்சம் ரூபா பெறுமதியான குழாய்க்கிணறு துளையிடும் இயந்திரமும் வவனியாப் பகுதிக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார்.

வவனியாவில்

# நூறு ஏக்கரில் நெற் செய்கை

[வவனியா]

செட்டிகுளம் பகுதியில் இவ்வருடம் 31 ஆயிரம் ஏக்கரில் எழுந்தும், 05 ஏக்கரில் நெல்லும் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

768 ஏக்கரில் நெல் செய்யப்பட நிலம் உள்ள போதும், தண்ணீர் பிரச்னை காரணமாக 105 ஏக்கரில் மட்டுமே நெல் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

# ஈழத்துச் சிதம்பரத்தில் சனிப்பிரதோஷம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர சிவன்கோவிலில் நாளை சனிக்கிழமை மாலை பிரதோஷ பூசையும், வழிபாடும் நடைபெறும். அதனைத்தொடர்ந்து சுவாமி இடபாரூடராய் வீதி வலம் வருவார். மாலை 5மணிக்குச் சைவமணி வித்துவான் மு. சபாரத்தினம் ''பிரதோஷ விரதம்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவார்.

# சேவைநலம் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். சமுகசேவை உதவி இயக்குநர் தா க. செங்காதரனின் சேவைநலன்பாராட்டுவிழா புங்குடுதீவு சர்வோதய நிலையத்தில் இம்மாதம் 17-ம் திகதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது. யாழ் அரசாங்க அதிபர்திரு தேவநேசன் நேசையா தலைமையில் நடைபெறும் இவ்விழாவை யொட்டி அன்றுகாலைகோட்டை முனிஸ்வரன் ஆலய சூழலை துப்பரவு செய்யும் சிரமதானப்பணி நடைபெறும். (க)

# சுவாமி யோகிராஜ் சச்சிதானந்தாவின் 69 வது ஜயந்தி விழா

[யாழ்ப்பாணம்]

குருதேவர் சுவாமி சிவானந்தரின் பிரதமசீடரும், இலங்கை திவ்யசங்கங்கள், சச்சிதானந்த சிறுவர் சங்கங்கள், சிவானந்த மாதர் சங்கம் ஆகியவற்றின் போஷகரும், தற்போதைய அமெரிக்க வாசியுமான யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தாவின் 69-வது ஜயந்தி விழா இம்மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை காலை திருவிளக்குப் பூசையுடன் ஆரம்பமாகி மாலை சிறுவர் கதம்ப நிகழ்ச்சியுடன் முடிவடையும்.

**வெற்றிடங்கள்**

முல்லைத்தீவில் ஆரம்பமாகும் வேலைத்தளமொன்றில் உள்ள பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- வேலைத்தள முகாமையாளர் (WORKSHOP MANAGER)
  தொழில்நுட்ப அறிவு விரும்பத்தக்கது; ஆனால் அத்தியாவசியமல்ல. நிலையத்தைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் திறன் முக்கியம்.
- களஞ்சியப் பொறுப்பாளர் (STORE - KEEPER)
  இயந்திர உதிரிப்பாகங்கள் பற்றிய அனுபவம் விரும்பத்தக்கது. ஏனையோரும் விண்ணப்பிக்கலாம்.
- மெக்கானிக்குகள் (MECHANICS)
  அவுட்போட் மோட்டர் திருத்துவதில் முன் அனுபவம் இருக்கவேண்டும். மேலதிக பயிற்சி வழங்கப்படும்.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்,**
காங்கேசன்துறை வீதி தெல்லிப்பளை

# துப்பாக்கி இளைஞர்கள் கொழும்பில் 'கொள்ளை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பத்தாம் ஒழுங்கையிலுள்ள வெளிநாட்டுத் தொழில் முகவர் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை துப்பாக்கிமுனையில் 51 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொள்ளை நடந்த 'தோமஸ்குக்' நிறுவனத்துக்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கார் ஒன்றில் வந்த 4 துப்பாக்கி இளைஞர்கள் சம்பந்தப்பட்டனராம்.

கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்ட கார் நேற்று மருதானை தொழில் நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் அநாதரவான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (இ-கு)

# கொள்ளைப் பணத்தில் ரூ. 50,000 மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டியிலுள்ள வீடொன்றில் கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் 50 ஆயிரம் ரூபாவை பொலிசார் கைப்பற்றியதுடன் 5 பேரை கைதுசெய்துள்ளனர்.

பம்பலப்பிட்டி கில்பிரட் பிளேசிலுள்ள மணியம் என்பவரது வீட்டில் கடந்த வாரம் 6 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. இதுதொடர்பாக விசாரணை செய்த பொலிசார் மகரகமவில் வைத்து இப்பணத்தில் ஒரு பகுதியை மீட்டதுடன் 5 பேரைக் கைதுசெய்தனர். (கு)

## நல்ல இன மாடு வழங்க ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

விவசாயப் பகுதியினர், யாழ்ப்பாணத்திலுள்ள மாடு வளர்ப்போருக்கு நல்லஇன மாடுகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

திருநெல்வேலி விவசாய பாடசாலையில் இந்த மாடுகளை பார்வையிடலாம். விவசாய உத்தியோகத்தர் திரு. ஆரியகுட்டியுடன் தொடர்பு கொண்டு, இதுதொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (க)

### மானிப்பாய்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டிலிப்பாய், அளவெட்டி, மானிப்பாய் பகுதிப்பாடசாலைகளுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியும், ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிப்பாடசாலைகளுக்கு நவாலி மகாவித்தியாலயமும் முதன்மைபாடசாலையாக விளங்கும்.

## மரண அறிவித்தல்

## திருமதி பரஞ்சோதி நாகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை, பரமேஸ்வராக் கல்லூரி)

இவர் யாழ். மாநகரசபை முன்னாள் சோலைவரி உத்தியோகத்தர் வே. நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், திருமதி யோகமணி நேசமாணிக்கம், தேவபாலசிங்கம் (Retd. Lecturer Teachers College, Palaly) தேவபாலன் முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர் (Retd. Sports Officer), திருமதி தேவமணி இராமநாதன், பூபாலசிங்கம் (Insurance Manager John Keels) ஆகியோரின் அருமைத் தாயாரும், எஸ். ஜி. என். புஷ்பரத்தினம் (SLBC), திருமதி புஷ்பராணி புலேந்திரன், புஷ்பநாயகம் (Redd Barna கொழும்பு), திருமதி புஷ்பநாயகி மேதர் (முன்னாள் ஆசிரியை நாவலப்பிட்டி), திருமதி புஷ்பரஞ்சிதம் (டொக்கி), ரட்ணதிலக்க (Jaffna University), செல்வி தேவமலர் (St Patricks, Talawakella), தேவசுகந்தி (Redd Barna விஸ்வமடு), தேவசீலி (Ceylinco Jaffna), தேவாநந்தன் (Newtones Jaffna), தேவநேசன் (மாணவன் St. John's Bosco), டானியல் ஜெபநேசன் (Motor Instructor), டிலானி (மாணவி, சுண்டுக்குளி மகளிர்), திருமதி புஷ்பராணி புஷ்பரத்தினம் (Walker Sons), புலேந்திரன் (Pushpa and Co.), செல்வராணி புஷ்பநாயகம் (SLBC), மனோ மேதர் (தொழில் அதிபர் (கொழும்பு), ரட்ணதிலக்க (Bursar Matara Campus) சகிலா டானியல் ஆகியோரின் அன்புப் பேத்தியும், பிரதீப் (St. John's), ரமேஷ் (யா/இந்துக் கல்லூரி), வாணி தீபா (இந்து மகளிர் கனிஷ்ட பாடசாலை). சுமங்கலி (மாணவி Holy Family Convent-Colombo), விரேந்திரன், லோகான், டவ்னல், நிக்கோலா, மனோஜா, அனோஜன் ஆகியோரின் அருமைப் பூட்டியும், காலஞ்சென்ற G. B. D. நேசமாணிக்கம், இராமநாதன், அன்னபூரணம் (ஆனைக்கோட்டை), இராஜமணி (ஆசிரியை விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி), இந்திராணி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொட்டடி கிறிஸ்தவ பொது சவக்காலையில் 17-12-83 சனிக்கிழமை காலை 10-00 மணியளவிலும், அடக்க ஆராதனை திருநெல்வேலி வளாக வீதி இல்லத்தில் காலை 9.00 மணிக்கும் நடைபெறும்.

(10583)

### தமிழ்நாட்டில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சொக்கலிங்கம் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 8,000 பேர் ஏற்கனவே விடுதலைசெய்யப்பட்டுள்ளார்களென்றும் அவர்தெரிவித்தார்.

மத்திய, மாநில அலுவலகங்களுக்கு முன்னால் நேற்று தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் மறியல் போராட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

அரசஅலுவலகங்களும், ரயில் பஸ் சேவைகளும் நேற்று வழமைபோல் இயங்கியதாகத் தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் இடவசதியின்மை காரணமாக மண்டபங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார். (வெ)

### மாடிக்கட்டிடம்.....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களைக் கொண்டு 5-ம் வகுப்புக்கு கீழ் இயங்கும் இப்பாடசாலையில் போதிய இடவசதியில்லாத குறையைப் போக்கும் வகையில் மேற்படி கட்டிடத்தை பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் முயற்சி எடுத்து பணம் பெற்று அமைத்து வருகிறார்.

இக்கட்டிட திறப்புவிழா அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி பாடசாலையில் ஒரு திறந்தவெளியரங்கு அமைக்க இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேற்படி சங்கத்தலைவர் திரு. செ. இலகுநாதனும் செயலாளர் திரு. தி சி. சண்முகலிங்கமும் அரங்கு அமைப்பதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிறார்கள்.

### திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி கொண்டுவந்த பெருந்தொகைப் பணத்தில், நூறு ரூபாயை மட்டும் எடுத்துச் சென்றதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் நல்லலிங்கம், பல அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார். தம்பலகாமம் ப. நோ. கூ. சங்கத் தலைவராகவும் இவர் கடமையாற்றுகிறார்; அறுபது வயதான டாக்டர், கொலையுண்ட செய்தி கேள்விப்பட்டதும், திருகோணமலை மாவட்டமே சோகத்தில் மூழ்கியது.

திருகோணமலை மாஜிஸ்திரேட் திரு. சரத் டி ஆப்ரு நேற்றுப் பிற்பகல் ஸ்தல விசாரணையை நடாத்தினார்.

### றெட்பானா...

[1-ம் கலத் தொடர்ச்சி]

வித்தார்.

இவர்கள் தொண்டர் சேவை என்ற பெயரிலேயே இங்கு வருகின்றனர் என்று கூறிய திரு. ஜெயக்கொடி, காந்திய இயக்கத்தின் பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றி அண்மையில் வெளியாகியிருந்தது பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வேளையில் குறுக்கிட்ட கலவான எம். பி. திரு. சரத் முத்தெட்டுவேகம, ''சர்வோதயம் சில நல்ல பணிகளையும் செய்திருக்கிறது'' என்றபோது ''பாதயாத்திரையை மறந்துவிட்டீர்கள்'' என்று பின்பகுதியிலிருந்து ஒரு குரல் கேட்டது.

''தொண்டர் ஸ்தாபனங்கள் என்ற பெயரில் இங்குவந்து தகவல் திரட்டுபவர்கள் மீது அரசு விழிப்பாக இருக்கவேண்டும்'' என்று திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி வேண்டுகோள் விடுத்தார். (இ-கு)

## இப்படியும் நடக்கிறது

(பாராளுமன்றத்தில் நேற்றுக் கேட்ட குரல்கள் இவை)

பொல்காவலை எம். பி. திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி: ''ரூபவாஹினியில் தமிழ், ஆங்கில செய்திகள் வாசித்து முடிந்ததும், பொதுவாக வணக்கம், குட்நைற் என்று கூறுவதற்குப் பதிலாக ஆயுபோவன் என்றே சொல்ல வேண்டும். இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.''

ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்:

''இந்த ஏற்பாடு சில மாதங்களுக்கு முன்னர் நடைமுறையிலிருந்தபோது, தமிழ் மக்களிலும் பார்க்க சிங்கள மக்களிடமிருந்தே கூடுதலான எதிர்ப்பு வந்தது. குட்நைற், வணக்கத்துக்குப் பதிலாக ஆயுபோவன் சொல்வது குறித்து ரூபவாஹினி ஊடாக மக்கள் கருத்து அறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்''

-''ஊடுருவி''

## ''தபால் நிலையங்களில் கொள்ளைகளைத் தடுப்பது பொதுமக்கள் கடமை!''

(மாவிட்டபுரம்)

பொதுமக்களின் வசதிக்காக இயங்கும் தபால் நிலையங்களை கொள்ளைகளில் இருந்து காப்பாற்றவேண்டியது பொதுமக்கள் கடமையாகும். ஆகவேதான் பொதுமக்கள் அங்கம் பெறும் வகையில் விழிப்புக்குழுக்களை அமைத்துவருகிறோம்.

இவ்வாறு மாகாண தபால் அத்தியட்சகர் திரு, மகேஸ்வரன் வசாவிளான் தபால் நிலைய விழிப்புக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்திில்கலந்துரையாற்றுகையில் கூறினார்.

சட்டத்தரணி வ. இராசநாயகம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''தபால் நிலையங்களில் நடக்கும் கொள்ளைச் சம்பவங்களால் பாதிக்கப்படுவது பொதுமக்கள் சேவைதான். பொதுமக்களுக்காக இயங்கும் தபால் நிலையங்களைக் காக்க வேண்டிய கடமையுடைய பொதுமக்கள் இப்படியான விழிப்புக்குழுக்களில் அங்கம் பெற்றுக் கொள்ளைகளைத் தடுக்க உதவவேண்டியதவசியமாகும் என்றார்.

சட்டத்தரணி வ. இராசநாயகம் பேசுகையில் மேற்படி தபால் நிலையம் அமைந்திருக்கும் பகுதி இராணுவமுகாம் பாடசாலை, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஆகவே 2ம் தரத்தில் உள்ள இத்தபால் நிலையத்தை முதலாம் தரத்துக்கு உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்

இவ்விழாவில் மாவட்ட தபால் அத்தியட்சகர் வை. அருளானந்தம் வசாவிளான் தபால் அதிபர் எஸ். தர்மராஜன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

மேற்படி இணைப்புக்குழுத் தலைவராக வ. இராசநாயகமும், உபதலைவராக என். குமாரசாமியும், காரியதரிசியும், தனதிகாரியுமாக எஸ். நிக்கிலஸ்சும், உறுப்பினர்கள் 8 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### சிம்பாவ்வே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கோஷ்டி ஒரு கட்டத்தில் 3 விக்கெட் இழப்புக்கு 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இக்கட்டத்தில் வீரர் அலிஸாவுடன், கோல்டன் சோடி சேர்ந்து ஆடி ஓட்டங்களின் எண்ணிக்கையை 62 ஆக உயர்த்திய போது, அலிஸா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆட்டம் முடிவடையும்போது கோல்டன் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இலங்கை கோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சு வீரர் வினோதன் ஜோண் சிறப்பாக பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை கோஷ்டி துடுப்பெடுத்தாட முற்பட்டபோது திடீரென பெய்த மழையால் மைதானம் மிகவும் ஈரமானதால் ஆட்டம் முடிருக கைவிடப்பட்டது. (வி)

### கார் கடத்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கார் பின்னர் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள ஒழுங்கையொன்றில் அனாதரவானநிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (க)

### தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கோவில் விஷயமாக ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து மனவிரக்தியால் 67 வயது வயோதிபர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

### 9 அரசியற்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகள், அம்மகாநாடு நடைபெற வேண்டிய திகதி, இடம் ஆகியனபற்றி இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இம்மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கட்சியும் தலைவரோடு இரு பிரதிநிதிகளை அனுப்பி வைக்க முடியும்.

### பூர்வாங்க,..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கலந்து கொள்ளாது என்றும் அவர் தெரிவித்தார்.

### பௌத்தமதத் தலைவர்களுக்கும் அழைப்பு

நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையில் இன ஒற்றுமையை ஏற்படுத்தும்முகமாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஏழு பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரோக்களை இன்று சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று பிற்பகல் 4-30 மணிக்கு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது. (வெ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] மேற்கு வீதி, [illegible]-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box, 49, Telephone, 22389 — 24126.